




காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில், நேற்று (05.01.2026) அமைச்சர் ஆர்.காந்தி ”உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ் அரசுக் கல்லூரி மற்றும் அர அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.க.ஆர்த்தி, ஒன்றிய குழுத்தலைவர் திருமதி.மலர்க்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், குன்றத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.சரஸ்வதி மனோகரன் ஆகியோர் உள்ளனர்.



பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட வாக்குசாவடி மையங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்தல்,நீக்கல் மற்றும் திருத்தல் செய்யும் சிறப்பு முகாமை,கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி, தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது, இ.கருணாநிதி எம்.எல்.ஏ,, பம்மல் தெற்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




திரு.வி.க. நகர் மண்டல அலுவலகக் கூட்டரங்கில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வில்லிவாக்கம், அன்னை சத்யா நகர் அருகில் வசிக்கும் 58 ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு மாற்று குடியிருப்புகள் வழங்குவது தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நேற்று (05.01.2026) நடைபெற்றது. இதில் மேயர் திருமதி ஆர். பிரியா, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

